(சாதாரண நிலையில்)    (நிமிட முள் மேற்கு பார்த்த நிலையில்)

சாதாரண நிலையிலிருந்து திசைகள் $90^{\circ}$ அளவு கடிகார திசையில் நகர்ந்துள்ளது. எனவே மணி முள் சரியாக வடக்குத் திசையில் இருக்கும்.

## பயிற்சி வினாக்கள் (Exercise Questions)

1. நிஷா என்பவர் வீட்டிலிருந்து மேற்கு நோக்கி 8 கிமீ தூரம் நடந்து பின்னர் தெற்குத்திசையில் 12 கிமீ நடந்தார். இறுதியில் கிழக்கு நோக்கி 8 கிமீ நடந்து ஓரிடத்தை அடைந்தார்.எனில், தற்போது அவர் வீட்டிலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளார்?

   1) 8 கிமீ  2) 12 கிமீ
   3) 10 கிமீ  4) 20 கிமீ

2. X என்பவர் 25 மீ கிழக்கு நோக்கி நகர்ந்து வலதுபக்கம் திரும்பி 40மீ தூரம் நடந்து பின்னர் நின்று விடுகிறார். எனில், ஆரம்ப இடத்தில் இருந்து எந்த திசையில் நிற்கின்றார் ?

   1) வடகிழக்கு  2) தென்கிழக்கு
   3) தென்மேற்கு  4) வடமேற்கு

3. X-க்கு தென்மேற்கு திசையில் 25 மீ தூரத்தில் Y என்பவரும், Y-க்கு தென்கிழக்கில் 25மீ தூரத்தில் Zஎன்பவரும் உள்ளார். எனில், Xலிருந்து Zன் திசை யாது?

   1) கிழக்கு  2) மேற்கு
   3) தெற்கு  4) வடக்கு

4. சதீஸ் என்பவர் கிழக்கு திசையில் நின்று கொண்டு இருக்கின்றார். பின்னர், $90^{\circ}$ கடிகார எதிர்திசையில் திரும்பி, மீண்டும் கடிகார திசையில் $90^{\circ}$ திரும்புகிறார். மீண்டும் கடிகார எதிர்திசையில் $180^{\circ}$ திரும்பினால், அவர் தற்போது எத்திசையை நோக்கி நிற்பார்?

   1) கிழக்கு  2) மேற்கு
   3) வடக்கு  4) தெற்கு

5. ஷாலினி என்பவர் மேற்கு நோக்கி திரும்பியுள்ளார். பின்னர், $45^{\circ}$ அளவில் கடிகார எதிர்திசையில் திரும்பி, மீண்டும் கடிகார திசையில் $180^{\circ}$ திரும்பினால், அவர் தற்போது எந்த திசையை நோக்கி

---

1. Nisha walked 8 km from her home towards west side. Then she waled towards 12 km. Finally she walked 8 km towards East and reached the place. howmany kilometers now she is from her home?

   1) 8km  2) 12km
   3) 10 km  4) 20 km

2. X moved towards East direction. Then he turns to his right and walks 40 m and then he stopped. In which direction is he now from his starting point?

   1) North East  2) South East
   3) South west  4) North west

3. Y is 25m South West of X. Z is 25 m South East of Y. Then, Z is in which direction of X?

   1) East  2) West
   3) South  4) North

4. Sathish is facing East. He turns $90^{\circ}$ in the clockwise direction and then another $90^{\circ}$ in the same direction. And then $180^{0}$ in the anti clockwise direction. Which direction is he facing now?

   1) East  2) West
   3) North  3) South

5. Shalini is facing west she turns in anti clockwise direction by $45^{\circ}$ then $180^{\circ}$ in the clockwise direction. Which direction is she facing now?

நிற்பார்?

1) கிழக்கு 2) வடமேற்கு
3) வடகிழக்கு 4) தென்மேற்கு

1) East 2) North West
3) North East 3) South West

6. மகேஷ் என்பவர் ஓரிடத்திலிருந்து 30மீ கிழக்குத் திசையில் நகர்ந்து வலப்புறம் திரும்பி 30 மீ நடக்கின்றார். பிறகு, இடப்புறம் திரும்பி 30 மீ நடக்கிறார். மீண்டும் இடதுபுறம் திரும்பி 15 மீ நடக்கின்றார். இறுதியாக தனது இடப்புறம் திரும்பி 60 மீ நடந்து ஓரிடத்தை அடைகிறார். எனில் , ஆரம்ப இடத்திலிருந்து தற்போது எவ்வளவு தொலைவில், எத்திசையில் நிற்கின்றார்?

1) 20 மீ வடக்கு
2) 30 மீ தெற்கு
3) 30 மீ மேற்கு
4) 15 மீ தெற்கு

6. Magesh walk 30m East. Then he turns his right and walks 30m. Then he again turns his left and walks 30 m then he again turns his left and walks 15m. Finally he turns his left and walks 60m and reaches a place. In which direction and how many meters away is he from his original position?

1) 20m North
2) 30m South
3) 30m West
4) 15m south

7. X என்பவர் 10மீ கிழக்குத் திசையில் சென்று பின்னர் கடிகார திசையில் 90 ° திரும்பி 8மீ நேராகச் செல்கின்றார். மீண்டும் 90° திரும்பி 16மீ நேராக செல்கிறார்.எனில் அவர் புறப்பட்ட இடத்தில் இருந்து எத்திசையில் இருப்பார்?

1) வடக்கு 2) வடமேற்கு
3) தென்கிழக்கு 4) தென்மேற்கு

7. X moved a distance of 10 m towards East and then turns 90 ° in the clokwise direction. and walks 8m straightly. Then he turns at an angle of 90° and walks 16m straightly. In which direction is he now from his starting point?

1) North East 2) North West
3) South East 4) South West

8. ஒருவர் 24மீ உயரமுள்ள கொடிமரத்தின் அடியில் இருந்து கிழக்குத் திசையில் 7 மீ செல்கின்றார். அங்கிருந்து கொடிமரத்தின் உச்சியைப் பார்க்கிறார். எனில், அவருக்கும் கொடிமரத்தின் உச்சிக்கும் இடைப்பட்ட தொலைவு யாது?

1) 8 மீ 2) 24மீ
3) 25மீ 4) 16மீ

8. A person moves 7m toward east from bottom of a pole of 24m height from there, he see the top of the pole. How much distance from him to the top of the pole?

1) 8m 2) 24m
3) 25m 4) 16m

9. நமிதா என்பவர் வீட்டிலிருந்து வடக்கு நோக்கி 3கிமீ தூரம் நடந்து சென்று, பின்னர் தனது இடதுபுறம் திரும்பி 2கிமீ தூரம் நடக்கின்றார். பின்னர், மீண்டும் தனது இடதுபுறம் திரும்பி 3கிமீ தூரம் நடக்கின்றார். தற்போது அவர் புறப்பட்ட

9. Namitha walked 3 km from her home towards North side. Then she turned to her left and walked 2km. Again she turned left and walked 3km. How many kilometres now is she from her starting point?

இடத்திலிருந்து எவ்வளவு தொலைவில் உள்ளார்?

1) 1 கிமீ 2) 2 கிமீ
3) 3 கிமீ 4) 5 கிமீ

10. ஒரு நாள் ரவி என்பவர் வீட்டிலிருந்து தனது மிதிவண்டியில் தெற்கு நோக்கி 10 கிமீ தூரம் சென்று பின்னர் வலதுபுறம் திரும்பி 5கிமீ தூரம் செல்கின்றார். பின்னர் மீண்டும் வலதுபுறம் திரும்பி 10 கிமீ தூரம் செல்கின்றார், அவரது வீட்டிற்கு நேராக செல்ல வேண்டுமெனில் எவ்வளவு கி.மீ அவர் தனது மிதிவண்டியில் பயணிக்க வேண்டும்?

1) 10கிமீ 2) 5கிமீ
3) 25கிமீ 4) 35 கிமீ

11. ஒரு சிறுமி அவள் வீட்டிலிருந்து வடமேற்கு திசையில் 30மீ தூரம் சென்று பின்னர் தென்மேற்கு திசையில் 30மீ தூரம் நடக்கின்றார். பின்னர், அவர் தென்கிழக்கு திசையில் 30 மீ தூரம் நடக்கின்றார். இறுதியாக அவள் தன் வீட்டை நோக்கித் திரும்புகிறாள். எனில், தற்போது எத்திசையில் அவள் நின்று கொண்டிருக்கிறாள்?

1) வடகிழக்கு 2) வடமேற்கு
3) தென்கிழக்கு 3) தென்மேற்கு

**வழிமுறை ( 12 - 13 )**

நான் ஒரு பூங்காவின் மையத்தில் நின்றுகொண்டிருக்கின்றேன். நான் கிழக்குத் திசையை நோக்கி நிற்கின்றேன். சுரேஷ் தென்மேற்கு திசையை நோக்கியும், அதே வேளையில் முகேஷ் வடமேற்கு திசையை நோக்கியும், ராஜா வடகிழக்கை நோக்கியும் நிற்கின்றனர். நாங்கள் ஒவ்வொருவரும் $90^{\circ}$ அளவில் கடிகார திசையில் திரும்புகிறோம். எனில்,

12. தற்போது நான் நோக்கும் திசை?

1) தென்கிழக்கு 2) தெற்கு
3) தென்மேற்கு 4) மேற்கு

1) 1km 2) 2km
3) 3km 4) 5km

10. One day Ravi lefe home and cycled 10km southwards, turned right and cycled 5km and turned right and cycled 10km and turned left and cycled 10km. Howmany kilometres will he have cycle to reach his home straight?

1) 10km 2) 5km
3) 25km 4) 35km

11. A girl leaves from her home. She first walks 30m in North-West direction and then 30m in south west direction. Next she walks 30m in south-East direction. Finally she turn towards her house. In which direction is she standing?

1) North East 2) North West
3) South East 4) South West

**DIRECTION ( Qn.12 - 13 )**

I am standing in the middle of a park. I am facing North West and Raja is facing North East. Now each one of us turns through an angle of $90^{\circ}$ in the clockwise direction.

12. In wich direction am I facing now?

1) South Eest
2) South
3) South West
4) West

13. முகேஷ் என்பவர் எத்திசையை நோக்கி நிற்கின்றார்?
1) வடக்கு 2) வடகிழக்கு
3) கிழக்கு 4) தென்கிழக்கு

**வழிமுறை ( 14 - 15 )**

நான் எனது வீட்டிலிருந்து கிழக்கு நோக்கி 5 கிமீ தூரம் சென்று பின்னர் இடதுபுறம் திரும்பி 3 கிமீ தூரம் சென்றேன். மீண்டும், நான் இடதுபுறம் திரும்பி 3 கிமீ தூரம் சென்றேன். முடிவில், நான் இடதுபுறம் திரும்பி 3 கிமீ தூரம் சென்றேன். எனில்,

14. நான் எனது வீட்டிலிருந்து எவ்வளவு தொலைவில் உள்ளேன்?
1) 14 கிமீ 2) 8 கிமீ
3) 11 கிமீ 4) 2 கிமீ

15. நான் எனது வீட்டிலிருந்து தற்போது எத்திசையில் நிற்கின்றேன்?
1) கிழக்கு 2) மேற்கு
3) வடகிழக்கு 4) தெற்கு

16. தென்கிழக்கு என்பது கிழக்கு திசையாகவும், வடமேற்கு என்பது மேற்கு திசையாகவும், தென்மேற்கு என்பது தெற்கு திசை எனவும் அழைக்கப்பட்டால் வடக்கு திசை எவ்வாறு அழைக்கப்படும்?
1) கிழக்கு 2) வடமேற்கு
3) தெற்கு 4) வடகிழக்கு

17. ‘ A ’என்பவர் 10மீ முன்நோக்கி சென்று, வலது புறம் திரும்பி 10மீ சென்று, பின்னர் ஒவ்வொரு முறையும் தனது இடதுபுறமாக முறையே 5, 15, மற்றும் 15 மீட்டர்கள் செல்கின்றார். அவர் தற்போது புறப்பட்ட இடத்திலிருந்து எவ்வளவு தொலைவில் உள்ளார்?
1) 5 மீட்டர் 2) 10மீட்டர்
3) 15 மீட்டர் 4) 20 மீட்டர்

13. Which direction is Muhesh is facing?
1) North
2) North East
3) East
4) South East

## DIRECTION ( Qn.14 - 15 )

After going 5 Km towards East from my house, I turned to left and went 3 Km. Again I turned to left and went 3 Km at the end I turned left and went 3 Km

14. How far I am from my house?
1) 14 Km 2) 8 Km
3) 11 Km 4) 2 Km

15. What is the direction of this place now from my house?
1) East 2) South
3) North East 4) West

16. If South East is called ‘East’ , North West is called ‘West’, South West is called ‘South’ and so on. What will North be called ?
1) East 2) North West
3) South 4) North East

17. ‘A’ walks 10 metres in front and then 10 metres to the right, then every time turning to his left, he walks 5, 15 and 15 metres respectively. How far is he now from his starting point?
1) 5 metres 2) 10 metres
3) 15 metres 4) 20 metres

18. Vijay is facing East. He turns in

18. விஜய் என்பவர் கிழக்கு நோக்கி நிற்கின்றார். பின்னர் கடிகார திசையில் $90^{\circ}$ திரும்புகிறார். பின்னர், $180^{\circ}$ அளவில் எதிர் கடிகார திசையிலும், மீண்டும் $90^{\circ}$ அளவில் கடிகார திசையிலும் திரும்புகின்றார். எனில், அவர் தற்போது எத்திசையை நோக்கி நிற்கின்றார்?
   1) கிழக்கு 2) மேற்கு
   3) தெற்கு 4) தென்கிழக்கு

19. அசோக் வடக்குத் திசையில் 15 கிமீ தூரம் சென்று, பின்னர் இடதுபுறம் திரும்பி மற்றொரு 4 கிமீ தூரம் செல்கின்றார். பின்னர் இடதுபுறம் திரும்பி மீண்டும் 12கிமீ தூரம் நடக்கின்றார். அவர் புறப்பட்ட இடத்திலிருந்து எவ்வளவு தொலைவில் எத்திசையில் உள்ளார்?
   1) 7கிமீ, வடக்கு
   2) 5 கிமீ, வடகிழக்கு
   3) 5 கிமீ, வடமேற்கு
   4) 11 கிமீ, தென்கிழக்கு

20. இரு நபர்கள் எதிரெதிர் திசையில் (முதுகுப்புறம் ஒட்டியவாறு) அமர்ந்துள்ளனர். முதல் நபரின் முகம் தெற்கு நோக்கி உள்ளது. இரண்டாவது நபரின் இடது கையானது எத்திசையில் அமையும்?
   1) கிழக்கு 2) மேற்கு
   3) வடக்கு 4) தெற்கு

21. ஒரு கடிகாரத்தில் 4.30 மணி என காட்டுகிறது. நிமிட முள் கிழக்குத் திசையில் இருந்தால், மணி முள், எத்திசையில் நிற்கும்?
   1) வடகிழக்கு 2) தென்கிழக்கு
   3) வடமேற்கு 4) வடக்கு

22. ஒருவர் தலைகீழாக நின்று யோகா செய்யும்போது அவரது முகம் தெற்குத் திசையில் இருந்தால்,அவரது வலது கை எத்திசையை நோக்கி இருக்கும்?
   1) மேற்கு 2) கிழக்கு
   3) வடக்கு 4) தெற்கு

clockwise direction by $90^0$ then $180^0$ in the anti-clockwise direction and then another $90^0$ in the clockwise direction. Which direction is he facing now ?
   1) East
   2) West
   3) South
   4) South East

19. Ashok walked 15 Km towards North then turns left and having walked another 4 Km, he turned left again and waled 12 Km more. How far is he from the starting point and in which direction?
   1) 7 Km North
   2) 5 Km North East
   3) 5 Km North West
   4) 11 Km South East

20. Two persons are sitting back to back. If the first persons face towards the south. In which direction will be the left hand of the second person?
   1) East 2) West
   3) North 4) South

21. A clock is so placed that at 4.30. Its minute hand point position towards East. In which direction it's hour hand position?
   1) North East 2) South East
   3) North West 4) North

22. A man is perfoming Yoga with the head down and legs up. His face is towards South. In which direction will his left hand be?

23. ஒரு நாள் காலையில் ரவி மற்றும் ராஜு இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தவாறு சந்தித்துக் கொள்கின்றனர். அப்போது, ராஜுவின் நிழல், ரவியின் இடது புறமாக விழுந்தால், ரவி தற்போது எத்திசையை நோக்கி நிற்கின்றார்?

1) கிழக்கு 2) மேற்கு
3) வடக்கு 4) தெற்கு

24. ஒரு கடிகாரம் பகல் 12.00 மணியைக் காட்டுகின்றது. அக்கடிகாரத்தின் நிமிடமுள் தெற்குத்திசையைக் காட்டுகின்றது. எனில், அதே நேரத்தில் மணி முள் காட்டும் திசை?

1) வடக்கு 2) தெற்கு
3) கிழக்கு 4) மேற்கு

25. A மற்றும் B ஆகியோர் ஒரே இடத்திலிருந்து நடக்கின்றனர். A என்பவர் வடக்குத் திசையில் 3 கிமீ தூரம் சென்று, தனது வலது புறம் திரும்பி 4 கிமீ தூரம் செல்கின்றார். அதே நேரம் B என்பவர் மேற்குத் திசையில் 5 கிமீ தூரம் சென்று தனது வலதுபுறம் திரும்பி 3 கிமீ தூரம் செல்கிறார். அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் எவ்வளவு தொலைவில் உள்ளனர்?

1) 10கிமீ 2) 9 கிமீ
3) 8 கிமீ 4) 5 கிமீ

1) West 2) East
3) North 4) South

23. One day morning Ravi and Raju met each other face to face. If Raju's shadow exactly to the left of Ravi. which direction was Ravi facing?

1) East 2) West
3) North 4) South

24. A clock is so place that at 12.00 noon. Its minute hand point position towards South. In which direction does its hour hand Point?

1) North 2) South
3) East 4) South

25. A and B start walking from the same point. A goes North and covers 3 Km,then turns right and covers 4 Km. B goes west and covers 5 Km, then turns right covers 3 km. How far apart are they from each other?

1) 10 Km 2) 9 Km
3) 8 Km 4) 5 Km

# 24. காலம் சார்ந்த கணக்குகள் (Time Related Problems)

**இவ்வகைக் கணக்குகளில் இரு விதமாக வினாக்கள் அமையும்.**

(i) ஒரு குறிப்பிட்ட கிழமையைக் கண்டறிதல் (எளியவகை)

(ii) கடிகாரக் கணக்குகள் (எளிய வகை)

இவ்வகைக் கணக்குகளில் ஒரு மாதம், நாள் கொடுக்கப்பட்டு, ஒரு குறிப்பிட்ட மாதத்தில் குறிப்பிட்ட தேதியில் வரும் கிழமையைக் கண்டறிய வேண்டும். மேலும் ஒரு குறிப்பிட்ட கிழமை மட்டும் கொடுக்கப்பட்டு, குறிப்பிட்ட நாட்களுக்குப்பிறகு வரும் கிழமையைக் கண்டறியும் வகையிலும் அமையலாம்.

இவ்வகைக் கணக்குகளை மட்டு எண் கணிதத்தையும், பின்வரும் முக்கியக் குறிப்புகளையும் பயன்படுத்தி எளிதில் கண்டறியலாம்.

**முக்கியக் குறிப்புகள் :**

| மாதம் | நாட்கள் | மாதம் | நாட்கள் |
|---|---|---|---|
| ஜனவரி | 31 | பிப்ரவரி | 28 / 29 |
| மார்ச் | 31 | ஏப்ரல் | 30 |
| மே | 31 | ஜுன் | 30 |
| ஜுலை | 31 | செப்டம்பர் | 30 |
| ஆகஸ்ட் | 31 | நவம்பர் | 30 |
| அக்டோபர் | 31 | | |
| டிசம்பர் | 31 | | |

**முக்கிய தினங்கள் :**

சுதந்திர தினம் / விடுதலை நாள் : ஆகஸ்ட் 15

குடியரசு நாள் : ஜனவரி 26

தொழிலாளர் தினம் : மே 1

காந்தி ஜெயந்தி : அக்டோபர் 2

தேசிய இளைஞர் தினம் : ஜனவரி 12

**லீப் ஆண்டை கண்டறியும் முறை :**

கொடுக்கப்பட்ட ஆண்டை 4 ஆல் வகுக்கும்போது கிடைக்கும் மீதி "0" எனில் அது லீப் வருடமாகும்.

(எ-கா) 1996, 2012, 2020

கொடுக்கப்பட்ட ஆண்டு நூற்றாண்டாக இருந்தால் 400 ஆல் வகுக்கும்போது கிடைக்கும் மீதி "0" எனில் அது லீப் வருடமாகும்.

(எ-கா) 1200, 2000

சாதாரண ஆண்டு 365 நாட்கள் = 52 வாரங்கள் + 1 நாள்
லீப் ஆண்டு 366 நாட்கள் = 52 வாரங்கள் + 2 நாட்கள்

(i) ஒவ்வொரு சாதாரண வருடமும் எந்த கிழமையில் தொடங்குகிறேதோ, அதே கிழமையில் முடிவடையும்.

(ii) எந்த ஒரு கிழமையும், 7 ன் மடங்குகளாக அமையும் நாட்களுக்கு அடுத்து வரும் நாளானது அதே கிழமையாக இருக்கும்.

**மட்டு எண் கணிதம் :**
நாள்காட்டி கணக்குகளுக்குத் தீர்வு காண மட்டு எண் கணிதத்தை பயன்படுத்தலாம். மட்டு என்பது வகுத்தலின் கீழ் பெறப்படும் மீதியைக் குறிப்பதாகும். மட்டு 7 என்பது 7 ஆல் வகுக்கும்போது கிடைக்கும் மீதிகளான 0,1,2,3,4,5,6 ஐக் குறிக்கும். ஒவ்வொரு கிழமைக்கும் உரிய மட்டு எண்கள் பின்வருமாறு.




**மட்டு எண் கணிதத்தை பயன்படுத்தும் முறை :**
(i) வினாவிற்குரிய இடைப்பட்ட நாட்களின் எண்ணிக்கையை கண்டறிய வேண்டும். ( இப்பகுதியை மாணவர்கள் மிகக் கவனத்துடன் கையாள வேண்டும்.

(a) எந்த தேதி கொடுப்பட்டுள்ளதோ, அத்தேதியை அம்மாதத்திற்குரிய மொத்த நாட்களில் இருந்து கழிக்க வேண்டும்.
(b) இடைப்பட்ட ஒவ்வொரு மாதங்களுக்குரிய நாட்களின் எண்ணிக்கையை கண்டறிய வேண்டும்.
(c) கிழமை கண்டறிய வேண்டிய மாதத்தில் கொடுக்கப்பட்ட நாள் வரை கணக்கில் கொள்ள வேண்டும்.
(d) அவை அனைத்தையும் கூட்ட வேண்டும்.

(ii) கணக்கிட்ட நாட்களின் எண்ணிக்கையுடன், கொடுக்கப்பட்ட கிழமைக்குரிய மட்டு எண்ணைக் கூட்ட வேண்டும்.

(iii) ( படி- ii.ல் ) கிடைத்த கூட்டுத்தொகையை 7 ஆல் வகுத்தால் கிடைக்கும் மீதியைக் கண்டறிய வேண்டும்.

(iv) ( படி- iii.ல் ) கிடைத்த மீதியை மட்டு எண்கணிதத்தில் குறிப்பிட்டுள்ள எண்ணுடன் ஒப்பிட்டுக்கிடைப்பது நமக்கு தேவையான விடை ( கிழமை ) யாகும்.

(எ.கா : 1)

2018 ஆம் ஆண்டு ஜுன் 15 ஆம் தேதி வெள்ளிகிழமை எனில், அதே ஆண்டு ஜுலை 23 ஆம் தேதி எக்கிழமையில் வரும் ?

1, திங்கள் கிழமை 2, செவ்வாய் கிழமை 3, ஞாயிற்று கிழமை 4, புதன் கிழமை

விடை ;

ஜுன் - 15 ஆம் தேதி (வெள்ளி)

ஜுலை- 23 ஆம் தேதி = ?

ஜுன் 15 ஆம் தேதி முதல் ஜுலை 23 ஆம் தேதி வரை உள்ள நாட்களைக் கணக்கிட வேண்டும். (படி- i)

ஜுன் = 15 (30-15)

ஜுலை = 23

38

இக்கூட்டுத்தொகையுடன் ( ஜுன் 15 ஆம் தேதி ) வெள்ளி கிழமைக்குரிய மட்டு எண்ணைக் ( 5 ) கூட்ட,

38 + 5 = 43 (படி- ii)

43 ஐ 7 ஆல் வகுக்க, (படி- iii)

```
     6
7 | 43
  | 42
  |----
  |  1
```

மீதி = 1 ; மீதி 1 என்பது மட்டு எண் கணிதத்தின்படி திங்கள் கிழமையைக் குறிக்கும் (படி- iv)

எனவே, ஜீலை 23 ஆம் தேதி திங்கட்கிழமையில் வரும்.

எ.கா : 2

கி.பி 1996 ஆம் ஆண்டு குடியரசு தினம் வெள்ளிக்கிழமை அன்று வந்தால், அவ்வாண்டில் சுதந்திரதினம் எக்கிழமையில் வரும் ?

1) புதன்கிழமை 2) வெள்ளிக்கிழமை 3) வியாழக்கிழமை 4) திங்கள்கிழமை

விடை :

குடியரசு தினம் : ஜனவரி - 26 (வெள்ளிக்கிழமை)

சுதந்திர தினம் : ஆகஸ்ட்-15 =?

ஜனவரி 26 முதல் ஆகஸ்ட் 15 வரை உள்ள நாட்கள் (படி- i)

ஜனவரி = 5 (31-26)

பிப்ரவரி = 29 (1996 ஆம் ஆண்டு லீப் ஆண்டு என்பதால் பிப்ரவரி மாதத்திற்கு 29 நாட்கள் வரும்)

மார்ச் = 31

ஏப்ரல் = 30

மே = 31

ஜுன் = 30

ஜுலை = 31

ஆகஸ்ட் = 15

202

இக்கூட்டுத்தொகையுடன் வெள்ளிக்கிழமை (ஜனவரி -26) க்குரிய மட்டு எண் 5 ஐக் கூட்ட (படி- ii)

202 + 5 = 207

கிடைத்த 207 ஐ 7 ஆல் வகுக்க (படி- iii)

```
     29
7 | 207
     14
     ---
     67
     63
     ---
      4
```

மீதி = 4 ;மீதி 4 என்பது மட்டு எண் கணிதத்தின்படி வியாழக்கிழமை ஆகும்.

எனவே 1996 ஆம் ஆண்டு சுதந்திரதினம் வியாழக்கிழமையில் வரும்.

(எ–கா :) (மாதம், தேதி குறிப்பிடப்படவில்லையெனில்)

இன்று முதல் வாரம் திங்கள் கிழமை. எனில், 18 நாட்களுக்குப் பிறகு எக்கிழமை வரும் ?

1) புதன் 2) வியாழன் 3) வெள்ளி 4) சனி

விடை :

இவ்வகைக் கணக்குகளை மிக எளிய முறையிலேயே கண்டறிந்து விடலாம்.

இன்று – திங்கள் கிழமை

8 வது நாள் – திங்கள் கிழமை ⟶ +7

15 வது நாள் – திங்கள் கிழமை

16 வது நாள்– செவ்வாய்

17 வது நாள் –புதன்

18 வது நாள் – வியாழன்

**கடிகாரக் கணக்குகள் ( எளிய வகை ) :**

இவ்வகைக்கணக்குகளில், கடிகார முட்கள் உருவாக்கும் கோணங்கள், கடிகார முட்கள் மேற்பொருந்தும் எண்ணிக்கை, எதிரெதிரே அமையும் எண்ணிக்கையை கண்டறியுமாறு வினாக்கள் அமையும்.

தேர்வைப் பொறுத்தவரையும் எளிய வகைக் கடிகாரக் கணக்குகளே கேட்கப்படுகின்றன.

முக்கியக்குறிப்புகள் :

( i ) ஒரு கடிகாரத்தில் வினாடி முள், நிமிடமுள், நிமிடமுள் (பெரியது), மணி முள் ( சிறியது ) என மூன்று முட்கள் உள்ளன. ஆனால், கணக்குகளைத் தீர்க்க, நிமிடமுள் மற்றும் மணிமுள்ளை மட்டும் கணக்கிற் கொள்ள வேண்டும்.

( ii ) ஒரு கடிகாரம் வட்ட அமைப்பில் சுழல்வதால் அது ஏற்படுத்தும் கோணம், $360^{\circ}$ அது பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவும் $30^{\circ}$ கோண அளவுடையது.(360/12 =30) மணிமுள்ளானது ஒவ்வொரு மணிநேரத்திற்கும் $30^{\circ}$ கடக்கும். ஒவ்வொரு பிரிவும் மேலும் 5 துணைப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. எனவே ஒவ்வொரு துணைப்பிரிவும் $6^{\circ}$ அளவில் பிரிக்கப்பட்டுள்ளன ( $30 / 5 = 6^{\circ}$).

( iii ) எந்த ஒரு நேரத்திலும் மணி முள்ளிற்கும், நிமிட முள்ளிற்கும் இடைப்பட்ட கோணம் =

மணி முள்ளின் கோணம் ~ நிமிட முள்ளின் கோணம்

மணி முள்ளின் கோணம் = $30^{o} \times \frac{\text{மொத்த மணி நேரம்}}{60}$

நிமிட முள்ளின் கோணம் = $6^{o}$ X இதர நிமிடங்கள்

(vi) ஒவ்வொரு மணிநேரத்திற்கும் ஒருமுறை இரு முட்களும் ஒன்றுடன் ஒன்று மேற்பொருந்துகின்றன.

( v ) இரு முட்களும் ஒன்றுடன் ஒன்று மேற்பொருந்தும்போதும், எதிரெதிரே அமையும்போதும் நேர்கோட்டில் இருக்கும்.

( vi ) ஒவ்வொரு 12 மணி நேரத்திற்கும் 11 முறை மட்டும் இரு முட்களும் ஒன்றுடன் ஒன்று மேற்பொருந்தும் ( ஏனெனில் 7 முதல் 1 மணி வரை இரண்டிற்கும் பொதுவாக 12 மணி அமைந்துள்ளது). ஒரு நாளில் 22 முறை முட்களும் ஒன்றுடன் ஒன்று மேற்பொருந்தும்.

( vii ) இரு முட்களும் செங்கோணத்தை (90) அமைக்கும்போது , அவற்றிற்கிடையே 15 நிமிடம் இடைவெளி இருக்கும்.

( viii ) இரு முட்களும் ஒன்றுக்கொன்று எதிரெதிரே அமையும்போது, அவற்றிற்கிடையே 30 நிமிட இடைவெளி இருக்கும்.

(ix) இரு முட்களும் 12 மணி நேரத்தில் 22 முறை செங்கோணத்தை அமைக்கும். ஒரு நாளில் 44 முறை செங்கோணத்தை அமைக்கும்.

(எ-கா : 1)

பிற்பகல் 2 மணிக்கு கடிகாரத்தின் மணி மற்றும் நிமிட முட்களுக்கிடையே காட்டும் குறுங்கோணம்

1) $120^{o}$  2) $90^{o}$  3) $10^{o}$  4) $60^{o}$

விடை :

இதர நிமிடங்கள் கொடுக்கப்படாமல் இருந்தால் மிக எளிமையாக கணக்குகளைத் தீர்க்கலாம். மணிமுள்ளானது 1 மணி நேரத்தில் $30^{o}$ ஐக் கடக்கும் என்பதால் 2 மணி அளவில் ($2 \times 30^{o}$) $60^{o}$ ஐக் காட்டும்.



(எ-கா : 2)

மாலை 6 மணியளவில் கடிகாரத்தில் மணி முள் மற்றும் நிமிட முட்களுக்கிடையேயான கோணம்?

1) $60^o$ 2) $120^o$ 3) $180^o$ 4) $0^o$

இதர நிமிடங்கள் கொடுக்கப்படவில்லை. எனவே, 6 மணிக்கு ($6 \times 30^o$) $180^o$ அளவில் இருக்கும்.

(எ.கா : 3)

பிற்பகல் 2.30 மணிக்கு கடிகாரத்தின் மணி மற்றும் நிமிடங்களுக்கு இடையேயான குறுங்கோணம்?

1) $105^o$ 2) $115^o$ 3) $135^o$ 4) $75^o$

இதர நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளதால், சூத்திரத்தைப் பயன்படுத்தலாம்.

**இரு முட்களுக்கிடையேயான கோணம் =**

**மணி முள்ளின் கோணம் ~ நிமிட முள்ளின் கோணம்**

Step-I :

**மணி முள்ளின் கோணம்**

$= 30^0 \times 2\frac{30}{60}$

$= 30^0 \times 2\frac{1}{2}$

$= 30^0 \times \frac{5}{2}$

$= 15^0 \times 5$

$= 75^0$

Step-II :

**நிமிட முள்ளின் கோணம்**

நிமிட முள்ளின் கோணம் $= 6^o \times 30$

$= 180^o$

∴ இரு முட்களுக்கு இடையேயான கோணம் $= 180^o - 75^o = 105^o$

எ.கா : 4

பிற்பகல் 3.20 மணியளவில் கடிகாரத்தின் மணி முள் மற்றும் நிமிடங்களுக்கு இடையேயான குறுங்கோணம் என்ன ?

1) $105^o$ 2) $115^o$ 3) $135^o$ 4) $75^o$

விடை :

இதர நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளதால், சூத்திரத்தைப் பயன்படுத்தலாம்.

**இரு முட்களுக்கிடையேயான கோணம் =**

**மணி முள்ளின் கோணம் ~ நிமிட முள்ளின் கோணம்**

Step-I :

<u>மணி முள்ளின் கோணம்</u>

$= 30^0 \times 3\frac{20}{60}$

$= 30^0 \times 3\frac{1}{3}$

$= 30^0 \times \frac{10}{3}$

$= 10^0 \times 10$

$= 100^0$

Step-II :

<u>நிமிட முள்ளின் கோணம்</u>

நிமிட முள்ளின் கோணம் $= 6^o \times 20$

$= 120^o$

∴ இரு முட்களுக்கு இடையேயான கோணம் $= 120^o - 100^o = 20^o$

## பயிற்சி வினாக்கள் (EXERCISE QUESTIONS)

1. 1.1.1999 அன்று வெள்ளிக்கிழமை. 11.4.1999 அன்று என்ன கிழமையாக இருக்கும்?

   1) வெள்ளிக் கிழமை 2) சனிக் கிழமை
   3) ஞாயிற்றுக் கிழமை 4) திங்கள் கிழமை

2. இன்று ஞாயிற்றுக் கிழமை. 42 நாட்களுக்குப் பிறகு என்ன கிழமையாக இருக்கும்?

   1) சனிக் கிழமை 2) ஞாயிற்றுக் கிழமை
   3) வெள்ளிக் கிழமை 4) திங்கள் கிழமை

3. 2019-ல் குடியரசு தினம் சனிக்கிழமை எனில் 19 பிப்ரவரி 2019 எந்த கிழமையாக இருக்கும்?

   1) புதன் கிழமை 2) திங்கட் கிழமை
   3) வியாழக் கிழமை 4) செவ்வாய் கிழமை

4. The day before yesterday was Sunday' எனில் the day after tomorrow என்பது

   1) வியாழக் கிழமை 2) வெள்ளிக் கிழமை
   3) புதன் கிழமை 4) செவ்வாய்க் கிழமை

5. எந்த ஒரு மாதத்தின் 5-ஆம் தேதி திங்கட் கிழமை வந்தால்,அந்த மாதத்தின் 27 ஆம் தேதி எக்கிழமையில் வரும்?

   1) திங்கள் கிழமை 2) செவ்வாய்க் கிழமை
   3) புதன் கிழமை 4) வெள்ளிக் கிழமை

6. எந்த ஒரு மாதத்தின் 7ஆம் நாள் ஆனது திங்கள் கிழமைக்கு மூன்று நாட்களுக்கு பிறகு வந்தால் அம்மாதத்தில் 20 ஆம் நாள் எக்கிழமையில் வரும்?

   1) செவ்வாய்க் கிழமை 2) புதன்கிழமை
   3) வியாழக் கிழமை 4) வெள்ளிக் கிழமை

7. 2017 ஆம் ஆண்டு புத்தாண்டு தினம் ஞாயிற்றுக் கிழமை அன்று வந்தால் 2018 ஆம் ஆண்டு புத்தாண்டு தினம் எக்கிழமையில் வரும்?

---

1. 1.1.1999 is Friday then ,which day will be on 11.4.1999?

   1) Friday 2) Saturday
   3) Sunday 4) Monday

2. Today is Sunday.The day after 42 days is

   1) Saturday 2) Sunday
   3) Friday 4) Monday

3. If the Republic day of 2019 was saturday,then name the day which february 19th 2019 falls

   1) Wednesday 2) Monday
   3) Thursday 4) Tuesday

4. If the day before yesterday was Sunday', the day after tomorrow will be

   1) Thursday 2) Friday
   3) Wednesday 4) Tuesday

5. If the date 5th of any month comes on Monday, then the day fall on 27th of that month.

   1) Monday 2) Tuesday
   3) Wednesday 4) Friday

6. If 7th day of any month comes three days later to Monday,then which day will be on 20th of that month?

   1) Tuesday 2) Wednesday
   3) Thursday 4) Friday

7. If new year of 2017 comes on Sunday,then which day will be on new year of 2018?

1) ஞாயிற்றுக் கிழமை 2) திங்கள் கிழமை
3) செவ்வாய் கிழமை 4) புதன் கிழமை

8. நான் ஆகஸ்ட் 11 ஆம் தேதி பிறந்தேன். ராகவ் என்னைவிட 11 நாட்கள் இளையவன். இந்த வருடம் சுதந்திர தினம்திங்கட்கிழமை வருகின்றது. எனில், ராகவின் பிறந்த நாள் எக்கிழமையில் வரும்?

1) புதன் கிழமை 2) ஞாயிற்று கிழமை
3) செவ்வாய் கிழமை 4) திங்கள் கிழமை

9. நிவாஷின் பிறந்த நாள் 2008 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தின் இறுதியில் வந்தது. அப்போது வெள்ளிக்கிழமை வந்தால், 2012 ஆம் ஆண்டு எக்கிழமையில் அவளது பிறந்த நாள் வரும்?

1) செவ்வாய் கிழமை 2) வியாழக் கிழமை
3) வெள்ளிக் கிழமை 4) புதன் கிழமை

10. நான் 2018 ஆம் ஆண்டு காந்தி ஜெயந்தி அன்று பிறந்தேன்.அன்று செவ்வாய் கிழமை இருந்தது. எனில் 2019 ஆம் ஆண்டுஎனது பிறந்த நாள் எக்கிழமையில் வரும்?

1) செவ்வாய்க் கிழமை 2) புதன்கிழமை
3) வியாழக் கிழமை 4)வெள்ளிக் கிழமை

11. 4.00 மணி அளவில் மணிமுள் மற்றும் நிமிடமுட்களுக்கிடையே அமையும் கோணம்.

1) $90^{\circ}$ 2) $125^{\circ}$ 3) $120^{\circ}$ 4) $115^{\circ}$

12. 2.00 am முதல் 8.00 pm வரை எத்தனை முறை மணிமுள் மற்றும் நிமிட முள்ஆகிய இரண்டும் நேர்க்கோட்டில் இருக்கும்?

1) 12 2) 10 3) 8 4) 11

13. ஒரு நாளில் எத்தனை முறை மணிமுள் மற்றும் நிமிட முள் ஆகிய இரண்டும் நேர்க்கோட்டில் அமையும்?

1) 43 2) 44 3) 24 4) 22

1) Sunday 2) Monday
3) Tuesday 4) Wednesday

8. I was born on August 11th. Raghav is 11 days younger than me.This year if Independance day falls on Monday.Then which day will be on Ragav's birth day ?

1) Wednesday 2) Sunday
3) Tuesday 4) Monday

9. Nivashini's birthday falls on the last day of the February 2008.the birth day of her will be on 2012 is

1) Tuesday 2) Thursday
3) Friday 4) Wednesday

10. I was born on Gandhi jayandhi in the year 2018.That day was my birthday(Tuesday). When day will be on 2019.

1) Tuesday 2) Wednesday
3) Thursday 4) Friday

11. At 4'0 clock,what angle will be formed between hour hand and minute hand of a watch.

1) $105^{0}$ 2) $135^{0}$ 3) $115^{0}$ 4) $95^{0}$

12. How many times the hour hand and the minute hand will form a straight line between 8 AM to 8 PM .

1) 12 2) 10 3) 8 4)11

13.How many times the hour hand and the minute hand will form a straight line in a day?

1) 43 2) 44 3) 24 4) 22

14. 2.30 மணி ஆக இருக்கும் பொழுது கடிகாரத்தின் இருமுட்களுக்கிடையேயான கோணம் என்ன?

1) $105^\circ$ 2) $135^\circ$ 3) $115^\circ$ 4) $95^\circ$

15. 8.24 am மணிக்கு, கடிகாரத்தின் மணிமுட்களுக்கிடையேயான கோணம் ...

1) $100^\circ$ 2) $108^\circ$ 3) $106^\circ$ 4) $107^\circ$

16. காலை 4.20 மணிக்கு மணி மற்றும் நிமிடமுட்களுக்கிடையே காட்டும் குறுங்கோணம்.

1) $20^\circ$ 2) $15^\circ$ 3) $120^\circ$ 4) $10^\circ$

17. ஒரு நாளில் கடிகாரத்தின் மணி மற்றும் நிமிட முட்கள் ஒன்று சேரும் நேரங்களின் எண்ணிக்கை?

1) 24 2) 23 3) 12 4) 22

18. கடிகாரத்தின் மணிமுள் மற்றும் நிமிட முள் ஆகிய இரண்டும் எதிரெதிரே நிற்கும்போது அவற்றிற்கிடையேயான கோணம்?

1) $90^\circ$ 2) $180^\circ$ 3) $360^\circ$ 4) $10^\circ$

19. காலை 4.30 மணிக்கு மணி முள் மற்றும் நிமிட முள்களுக்கிடையே காட்டும் குறுங்கோணம்?

1) $45^\circ$ 2) $50^\circ$ 3) $60^\circ$ 4) $30^\circ$

20. நண்பகல் 11.52 மணிக்கு மணிமுள் மற்றும் நிமிடமுள்களுக்கிடையே காட்டும் குறுங்கோணம்.

1) $44^\circ$ 2) $26^\circ$ 3) $42^\circ$ 4) $12^\circ$

14. What will be the acute angle between hands of a clock at 2.30?

1) $105^0$ 2) $135^0$ 3) $115^0$ 4) $95^0$

15. What is the angle between the 2 hands of the clock at 8.24 am?

1) $100^0$ 2) $108^0$ 3) $106^0$ 4) $107^0$

16. When the time is 4.20 am the angle between the hands of the clock is ______

1) $20^0$ 2) $15^0$ 3) $120^0$ 4) $10^0$

17. The number of times in a day,the two hands of a clock coincide is

1) 24 2) 23 3) 12 4) 22

18. When the hour hand forms a straight line the angle between the hand of the clock is.

1) $90^0$ 2) $180^0$ 3) $360^0$ 4) $10^0$

19. When the time is 4.30 am the angle between the hands of the clock is.

1) $45^0$ 2) $50^0$ 3) $60^0$ 4) $30^0$

20. When the time is 11.52 noon,the angle between the hands of the clock is.

1) $44^0$ 2) $26^0$ 3) $42^0$ 4) $12^0$

# 25. புதிர் கணக்குகள்
# (Puzzle Problems)

இவ்வகைக் கணக்குகள் மாணாக்கர்களின் விரிசிந்தனைத் திறன், கணிதத் திறன் , சூழ்நிலைக்கேற்ப முடிவெடுக்கும் திறன் போன்றவற்றைச் சோதித்து அறியும் வகையில் இருக்கும். இவ்வகைக் கணக்குகள் பல்வேறு வகைகளில் கேட்கப்படலாம் என்பதால், மாணாக்கர்கள் அதிகளவில் பயிற்சி மேற்கொள்வது அவசியமானது.

**எ.கா : ( 1 )**

ஒருவன் முதல் நாளில் 3 ரூபாய் வருமானம் ஈட்டுகின்றான். ஒவ்வொரு மறுநாளும் அவனது வருமானமானது இரு மடங்காகிறது. எனில், அவன் 10வது நாளில் எவ்வளவு வருமானம் ஈட்டுவான் ?

1) 768    2) 1536    3) 3072    4) 30

விடை :

முதல் நாளில் கிடைக்கும் தொகை ( a ) = ரூ.3

மடங்கு (r) = 2

10 வது நாள் (n) = 10

10 வது நாள் (n) அவன் பெறும் வருமானம் ( $T_n$ ) = $ar^{n-1}$

$= 3 \times (2)^{10-1}$

$= 3 \times (2)^{9}$

$= 3 \times 512$

= **ரூ.1536**

**எ.கா : ( 2 )**

ஒரு மிருகக்காட்சி சாலையில் மான்களும் மயில்களும் உள்ளன.தலைகளை எண்ணும்போது 80 வருகின்றது.அவற்றின் கால்களை எண்ணும்போது 200 வருகின்றது. எனில் அங்கு எத்தனை மயில்கள் உள்ளன ?

1) 20    2) 30    3) 50    4) 60

மான்களின் எண்ணிக்கை = x

மயில்களின் எண்ணிக்கை = y

தலைகளை எண்ணும்போது 80 வருவதால்,

$x + y = 80$ —— (1)

கால்கள் எண்ணும்போது 200 வருகிறது.(மான் – 4 கால்கள், மயில் – 2 கால்கள்).

$4x + 2y = 200$ —— (2)

$4x + \cancel{2y} = 200$

(1) x 2    $2x + \cancel{2y} = 160$

$-\quad -\quad -$

(2) - (1)    $2x = 40$

$2x = 40$

$x = 40 / 2$

$x = 20$

X-ன் மதிப்பை சமன்பாடு (1) -ல் பிரதியிட,

$y = 80 - 20$

$y = 60$

மயில்களின் எண்ணிக்கை = 60

**எ.கா : ( 3 )**

ஒரு ஆடு மேய்ப்பவரிடம் 20 ஆடுகள் உள்ளன.அவர் "All but seven died" எனக் கூறினால்,மீதமுள்ள ஆடுகளின் எண்ணிக்கை எத்தனை?

1) 13 2) 27 3) 7 4) 10

விடை:

"All but" என்பது புதிர் வார்த்தை (Puzzle word) ஆகும்.இதன் பொருள் "தவிர" என்பதாகும். அதாவது "7 ஆடுகளைத் தவிர" மற்றவை இறந்து விட்டன என்ற பொருள் தருமாறு இவ்வினாவில் வந்துள்ளது. எனவே, அவரிடம் மீதமுள்ள ஆடுகள் "7" ஆகும்.

**எ.கா : ( 4 )**

ஒரு குடும்பத்தில் ஒரு குடும்பத்தலைவர், அவருடைய மனைவி,இரு மகன்கள் மற்றும் அவர்களுடைய மனைவிகள் உள்ளனர்.ஒவ்வொரு மகனுக்கும் இரு மகள்கள் உள்ளனர். எனில், அக்குடும்பத்தில் உள்ள பெண்கள் எத்தனை பேர்?

1) 5 2) 3 3) 6 4) 7




அக்குடும்பத்தில் உள்ள பெண்கள் = 1 + 2 + 4 = 7

## பயிற்சி வினாக்கள் (EXERCISE QUESTIONS)

1. ஒரு பேருந்துக்கு முன்னால் 4 பேருந்துகள் உள்ளன.ஒரு பேருந்துக்குப் பின்னால் 4 பேருந்துகள் உள்ளன.ஒரு பேருந்து நடுவில் உள்ளது.எனில் மொத்த பேருந்துகள் எத்தனை?

1) 5 2) 6
3) 7 4) 8

2. ஒருசாலையில் மகிழுந்தும்,மிதிவண்டியும் செல்கின்றன. அவற்றின் மொத்த எண்ணிக்கை 50 வருகிறது. மகிழுந்து மற்றும் மிதிவண்டி சக்கரங்களின் எண்ணிக்கை 164 எனில் எத்தனை மிதி வண்டிகள் உள்ளன.

1) 20 2) 24
3) 18 4)16

3. சாரணிய கேப்டன்கள் மற்றும் சாரணியர்கள் உள்ளடங்கிய 1200 பேர் கொண்ட குழு பேரிடர் மீட்பிற்காக தொடர் வண்டியில் செல்கின்றனர். ஒவ்வொரு 19 சாரணியர்களுக்கும் ஒரு சாரணிய கேப்டன் உள்ளனர். எனில் அத்தொடர்வண்டியில் பயணம் செய்யும் சாரணிய கேப்டன்கள் எண்ணிக்கை என்ன?

1) 50 2) 55 3) 75 4) 60

4. பிரியா என்ற அரசுப்பள்ளி மாணவி முதல் நாள் ஆலயத்தில் இறைவனுக்கு ஒரு ரோஜாப்பூ படைக்கின்றாள்.இரண்டாம் நாள் மூன்று மடங்கு ரோஜாப்பூக்களைப் படைக்கின்றாள்,எனில் ஐந்தாம் நாள் இறுதியில் இறைவனுக்கு எத்தனை பூக்களைப் படைத்திருப்பாள் ?

1) 32 2) 81 3) 15 4) 82

5. இராமேஸ்வரத்திலிருந்து சென்னை செல்லும் சேது விரைவு தொடர் வண்டியில் 24 பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன.ஒவ்வொரு பெட்டியிலும் 90 இருக்கைகள் உள்ளன.இதில் இராமேஸ்வரத்திலிருந்து புறப்படும் போது 50% இருக்கைகள் நிரம்பி

1.What is the minimum number of buses that could running in the formation - 4 buses in front of a bus, 4 buses behind a bus and a bus in the middle ?

1) 5 2) 6
3) 7 4) 8

2.Some cars and bicycles move in the road. Thier total is 50. If the sum of wheels of cars and bicycles is 164. How many bicycles are there?

1) 20 2) 24
3) 18 4) 16

3. A group of 1200 persons, including scout captains and scout students go to disaster rescue in a train. Each 19 scout students has one scout captain. How many scout captains travel in that train ?

1) 50 2) 55
3) 75 4) 60

4.Priya, a goverment school student went to a temple. First day, she offered a rose to the God. In second day, she offered thrice of roses. Then how many roses will she offer on the $5^{th}$ day ?

1) 32 2) 81
3) 15 4) 82

5. 24 compartments are joined in Sethu express which is from Rameswaram to Chennai.In each compartment 90 seats are available. While moving from Rameswaram 50% of seats are occupied when it comes to Ramanathapuram 10% of passengers are got

விட்டன. தொடர் வண்டி இராமநாதபுரம் வரும்பொழுது 10% பயணிகளும் திருச்சிராப்பள்ளியில் 7% பயணிகளும் விழுப்புரத்தில் 8% பயணிகளும் வண்டியில் ஏறுகின்றனர். விரைவு வண்டி சென்னை வரும்பொழுது தொடர்வண்டியில் இருக்கும் பயணிகளின் எண்ணிக்கை எத்தனை ?

1) 2100 2) 1620 3) 1720 4) 1800

into the train. When it comes to Trichy 7% of passengers and 8% of passengers in viluppuram are got into the train. Then how many passengers will be there when it reaches to Chennai?

1) 2100 2) 1620

3) 1720 4) 1800

6. கபீர் என்பவருக்கு 4 மகள்கள் உள்ளனர். ஒவ்வொரு மகளுக்கும் ஒரு சகோதரர் உள்ளார். எனில் கபீருக்கு குறைந்தபட்சம் எத்தனை குழந்தைகள் உள்ளனர்.?

1) 8 2) 4 3) 5 4) 9

6. Kabeer has 4 daughters each daughter has one brother. The minimum number of children for Kabeer is

1) 8 2) 4

3) 5 4) 9

7. ஒரு கோபுரத்தில் உள்ள நான்கு மணிகள் முறையே 5,7,3 மற்றும் 12 வினாடிகள் இடைவெளியில் அடிக்கின்றன. அனைத்து மணிகளும் 5 am க்கு ஒன்றாக அடித்தன என்றால், அனைத்து மணிகளும் அடுத்து ஒன்றாக அடிக்கும் நேரம் :

1) 5.10 am 2) 5.15 am
3) 5.07 am 4) 5.08 am

7. Four bells toll in a tower at interval of 5,7,3 and 12 seconds respetively if all of them toll at 5am, the next time they will toll together is :

1) 5.10 am 2) 5.15 am
3) 5.07 am 4) 5.08 am

8. ஒரு வேலையாள் நாள் ஒன்றிற்கு ரூ.100 வீதம் சம்பளம் பெறுகிறார். அவர் வேலைக்கு வராமல் உள்ள நாள் ஒன்றிற்கு ரூ.50 வீதம் பிடித்தம் செய்யப்படுகிறது. அவர் 30 நாட்கள் கொண்ட மாதத்தில் ரூ.2400 சம்பளம் பெற்றார். எனில் எத்தனை நாள்கள் அவர் வேலைக்கு வராமல் இருந்திருப்பார் ?

1) 12 2) 8 3) 6 4) 4

8. A worker is paid Rs.100/- per day for attending work and fined Rs.50/- on the day of his absence. If in a month of 30 days he earns Rs.2400/-for how many days he was absent ?

1) 12 2) 8 3) 6 4) 4

9. ஒரு குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஆறு ஆப்பிள்கள் பகிர்ந்து அளிக்கப்படும் போது ஒரு ஆப்பிள் மீதமுள்ளது. குழுவில் உள்ள ஒவ்வொருவருக்கும் 7ஆப்பிள்களை கொடுக்கும்போது, ஒருவருக்கு மட்டும் ஏதும் கிடைக்கவில்லை. எனில், அக்குழுவில் உள்ள உறுப்பினர்களின்

9. When six apples were distributed to each member of a group, one apple was left.when each was given 7 apples. One member did not get any. The number of members in the group was.

1) 8 2) 9 3) 10 4) 25

எண்ணிக்கை ?

1) 8 2) 9

3) 10 4) 12

10. ஒரு சுற்றுலாவில், மாணவர்கள் தங்களுடைய புகைப்படங்களை ஒருவருக்கொருவர் மாற்றிக் கொள்கின்றனர்.அங்கு 45 புகைப்படங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டால், எத்தனை மாணவர்கள் அங்கு இருந்திருப்பார் ?

1) 15 2) 20

3) 9 4) 25

11. ABCD என்ற செவ்வகத்தில் O என்பது ஒரு புள்ளி ஆகும். இப்புள்ளியிலிருந்து செங்குத்து OP,OQ,OR மற்றும் OS ஆகியவை செவ்வகத்தின் பக்கங்களிலிருந்து வரையப்படுகின்றன. OP,OQ,OR மற்றும் OS முறையே 8 செமீ, 12 செமீ, 6 செமீ மற்றும் 10 செமீ ஆக இருந்தால், செவ்வகத்தின் சுற்றளவு என்ன ?

1) 48 செமீ 2) 60 செமீ

3) 72 செமீ 4) 264 செமீ

12. ஒரு குரங்கு 30மீட்டர் உயரமுள்ள கம்பத்தின் உச்சியில் ஏறுகின்றது. ஒவ்வொரு 4மீட்டர் ஏறும்போதும், 2 மீட்டர் சறுக்குகிறது. அது கம்பத்தின் உச்சியை அடைய எத்தனை முறை ஏறும்?

1) 14 2) 15

3)16 4) 18

13. கீழே கொடுக்கப்பட்டுள்ள பெருக்கல் கணக்கில் 'C'-ன் மதிப்பு என்ன?

```
  5 C 7
    2 A
 -------
  1 7 9 B
1 1 9 4
---------
1 3 D 3 1
---------
```

1) 8 2) 3 3) 7 4) 9

10.In a tour, the students exchanged their photographs with other numbers. How many students were there if a total of 45 photographs were exchanged?

1) 15 2) 20

3) 9 4) 25

11. O is a point in a rectangle ABCD from this point perpendiculars OP, OQ, OR and OS are drawn to the sides of the rectangle. If OP, OQ, OR and OS are 8cm, 12cm, 6cm and 10cm respectively,the perimeter of the rectangle is

1) 48cm 2) 60cm

3) 72cm 4) 264cm

12. A monkey is trying to reach the top of a pole which is 30 mtrs high from the ground. It is climbing every 4 mtrs it slips down 2 mtrs. how many attempts will it take to reach the top of the pole?

1)14 2)15

3) 16 4) 18

13.What is the value of 'C' in the following multiplication problem ?

```
  5 C 7
    2 A
 -------
  1 7 9 B
1 1 9 4
---------
1 3 D 3 1
---------
```

1) 8 2) 3

3) 7 4) 9

14. இரு எண்கள் உள்ளன. அவற்றுள் பெரிய எண் 9568. அவ்விரு எண்களுக்கிடையேயான வேறுபாடு 145. எனில், மற்றொரு எண் என்ன ?

1) 9413 2) 9421
3) 9423 4) 9123

14. There are two number, the bigger one is 9568 and the difference between the two number is 145 what is the other number ?

1) 9413 2) 9421
3) 9423 4) 9123

15. மூன்று கோபுரங்களின் உயரங்களின் விகிதம் 3:5:7.ஒரு சிலந்தியானது 15 நிமிடங்களில் சிறிய கோபுரத்தின் உச்சியை அடைந்தால், பெரிய கோபுரத்தில் ஏற எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்ளும்?

1) 25 நிமிடங்கள்
2) 30 நிமிடங்கள்
3) 35 நிமிடங்கள்
4) 45 நிமிடங்கள்

15. The heights of three towers are in the ratio of 3:5:7.if a spider takes 15 minites to clime the shortest tower,how much time will it take to clime the heighest one ?

1) 25 minutes 2) 30 minutes
3) 35 minutes 4) 45 minutes

16. 'REGIONAL' என்ற ஆங்கில வார்த்தையானது அகரவரிசைப்படி எழுதப்பட்டால்,எத்தனை எழுத்துக்கள் தங்களின் நிலையை (Position) தக்க வைத்துக் கொள்ளும்?

1) மூன்று 2)இரண்டு
3) நான்கு 4) ஒன்று

16. When letter of english word 'REGIONAL' are arranged alphabetically in sequence then how many letters will remain in its original position?

1) Three 2) Two
3) Four 4) one

17. "UNIFORMITY"என்ற வார்த்தையில் முதல் மற்றும் ஆறாவது எழுத்தை இடம் மாற்றியும், இதேபோன்று இரண்டாவது மற்றும் ஏழாவது எழுத்தை இடம் மாற்றியமைத்தபின் வலது புற முனையில் இருந்து 4 வதாக அமையும் எழுத்து எது?

1) I 2) U
3) N 4) M

17. If the position of the first and the sixth letters of the word 'UNIFORMITY' are interchanged, similary the position of the 2nd and 7th letters interchanged and so on.Which letter will be 4th form right end after arrangement.

1) I 2) U
3) N 4) M

18. A fan always has __________

1) switch 2) current
3) roire 4) blades

18. A fan always has ____________

1) switch 2) current
3) roire 4) blades

19. 1முதல் 50 வரையிலான எண்களில் 4 ஆல் மீதியின்றி வகுபடக்கூடியதாகவும்,4 என்ற எண்ணை

19. How many numbers from 1 to 50 are there each of which is not only exactly divisible by 4

ஓர் எண்ணாகக் கொண்டும் உள்ள எண்கள் எத்தனை?

1) 7 2)10 3) 20 4) 21

but also has 4 as a digit?

1) 7 2) 10 3) 20 4) 21

20. ஒரு சிறுவன் அவனுடைய சகோதரர்களைவிட இரு மடங்கு சகோதரிகள் இருப்பதாக கூறுகின்றான். அவனுடைய சகோதரி, அவளுடைய சகோதரர்களின் எண்ணிக்கையும் சகோதரிகளின் எண்ணிக்கையும், சமமாக இருப்பதாக கூறுகின்றாள். எனில் எத்தனை சகோதரர்கள், எத்தனை சகோதரிகள் அங்கு உள்ளனர்.

1) 2 சகோதரர்கள், 2 சகோதரிகள்
2) 2 சகோதரர்கள், 3 சகோதரிகள்
3) 3சகோதரர்கள், 4 சகோதரிகள்
4) 3சகோதரர்கள், 3 சகோதரிகள்

20. A boy said,his sister twice then her brothers. his sister replied that the strength of her brothers and sisters are equal. how many brothers and sisters are there?

1) 2 brothers and 2 sisters

2) 2 brothers and 3 sisters

3) 3 brothers and 4 sisters

4) 3 brothers and 3 sisters

21. திருமணமான ஒருவருக்கு, 4 திருமணமான மகன்களும், ஒவ்வொரு மகனுக்கும் 3 குழந்தைகளும் உள்ளனர். எனில் அக்குடும்பத்தில் உள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை ?

1) 22 2) 20 3) 21 4) 23

21. A married person has 4 married sons each having 3 children.How many members are in the family?

1) 22 2) 20

3) 21 4) 23

22. ஒரு மருத்துவர், ஒரு நோயாளியிடம் 5 மாத்திரைகளைக் கொடுத்து ஒவ்வொரு 2 மணி நேரத்திற்கும் ஒரு மாத்திரையை விழுங்கக் கூறினார். அந்நோயாளி 9.00 am-க்கு முதல் மாத்திரையை எடுத்துக்கொண்டால், எத்தனை மணிக்கு கடைசி மாத்திரையை உட்கொள்வார்?

1) 12 noon 2) 5 p.m

3) 6 p.m 4) 7 p.m

22. If a docter give 5 tablets to a patient and advises him to take the tablet every 2 hours. patient takes first tablet at 9.00 am at what time he will take last tablet?

1) 12 noon 2) 5 p.m

3) 6 p.m 4) 7 p.m

23. ஆங்கில எழுத்துக்கள் வலமிருந்து இடமாக எழுதப்பட்டால், வலமிருந்து 20-வது எழுத்திற்கு இடதுபுறமாக 4வதாக அமையும் எழுத்து?

23. If the English alphabet are written in the reverse order z to a in a row then which will be the 4$^{th}$ letter to the left of 20$^{th}$ letter from right?

1) P 2) Q
3) X 4) V

24. 10.கி.மீ தூரம் கொண்ட ஒரு சாலையில் 500 மீட்டர் இடைவெளிகளில் தூண்கள் எழுப்பப்படுகிறது. எனில் அச்சாலையில் எழுப்பப்படும் தூண்களின் எண்ணிக்கை எத்தனை?

1) 20 2) 21 3) 19 4) 22

25. 1 2 3 4 5 6 7 8 9 10 11 12 13 14 15 என்ற எண்ணை 4-ஆல் வகுக்கும்போது கிடைக்கும் மீதி.

1) 0 2) 1 3) 2 4) 3

26. கீழ்க்கண்ட கழித்தல் கணக்கில், எந்த எண் More என்ற வார்த்தையைக் குறிக்காதது?

```
  M O R
- O R E
-------
  2 2 2
-------
```

1) 8640 2) 6420
3) 7531 4) 9753

27. ஒரு வாத்திற்கு முன்னால் இரு வாத்துக்கள் உள்ளன. ஒரு வாத்திற்கு பின்னால் இரு வாத்துக்கள் உள்ளன.இரு வாத்துக்களுக்கு நடுவில் ஒரு வாத்து உள்ளது.எனில் அங்குள்ள குறைந்தபட்ச வாத்துக்களின் எத்தனை?

1) மூன்று 2) நான்கு 3) ஐந்து 4) ஏழு

28.ஒருவன் பறவை வேட்டையாடி விட்டு வருகிறான்.அவன் தன்னுடைய பையில் எவ்வளவு பறவைகள் உள்ளன என்று கூறினான்.அவன் 'They are all sparrows but six;all pigeons but six;and all doves but six என்று கூறினான்.எனில்,அவனிடம்

1) P 2) Q 3) X 4) V

24. The pillars has to be erected on 10 km road at equal distance of 500 meters. how many pillars are erected in that road?

1) 20 2) 21 3) 19 4) 22

25. If 1 2 3 4 5 6 7 8 9 10 11 12 13 14 15 is dirided by 4 then the remainder will be

1) 0 2) 1 3) 2 4) 3

26. In the following problen of subtraction find out the number which does not stand for MORE.

```
  M O R
- O R E
-------
  2 2 2
-------
```

1) 8640 2) 6420
3) 7531 4) 9753

27. What is the minimum number of ducks that could swim in the formation two ducks in frond of a ducks, two ducks behind a duck, and a duck between two ducks?

1) Three 2) Four 3) Five 4) Seven

28. After hunting a hunter has some birts in his bag. he told that how many birds he has he told, 'They are all sparrows but six;all pigeons but six;and all doves but six.how many birds he has?

1) 18 2) 9 3) 126 4) 36

உள்ள பறவைகள் எத்தனை?

1) 18 2) 9 3) 126 4) 36

29. ஒரு கருத்தரங்கில் பங்கேற்ற பத்து நபர்களும் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் கைகுலுக்கிக் கொண்டால், எத்தனை முறை கைகுலுக்கள்கள் அங்கு நடைபெற்றிருக்கும் ?

1) 20 2) 45 3) 55 4)90

29.In a seminar hall, if all to participants shake hand with each other,then how many shakes would have been made there?

1) 20 2) 45

3) 55 4) 90

30. ஒரு குடும்பத்தில் ஒரு குடும்பத்தலைவர், அவருடைய மனைவி,மூன்று மகன்கள் மற்றும் அவர்களுடைய மனைவிகள் உள்ளனர். ஒவ்வொரு மகனுக்கும் இரு மகன்கள் மற்றும் ஒரு மகள் உள்ளனர். எனில், அக்குடும்பத்தில் ஆண்கள் எத்தனை பேர்?

1) 4 2) 10 3) 8 4) 12

30. A family has a man,his wife,their three sons and their wives the family of every son also has three sons and one daughter.The total number of male members is

1) 4 2) 10

3) 8 4) 12

# 26. தரம் சார்ந்த கணக்குகள் மற்றும் எண்/எழுத்து அறிவைச் சோதித்தல் [Ranking Test and Number/Letter Test]

**தரம் சார்ந்த கணக்குகள் :**

இவ்வகை கணக்குகளில் வினாவானது மொத்த நபர்களில் / எழுத்துக்களில், ஒரு குறிப்பிட்ட நபரின் / எழுத்தின் இடத்தை கண்டறியும் வகையிலோ அல்லது மொத்த நபர்களின் / எழுத்துக்களின் எண்ணிக்கையை கண்டறியும் வகையிலோ இருக்கும்.

**தரம் சார்ந்த கணக்குகள் : - எண் :**

1) மொத்த நபர்களின் எண்ணிக்கை = (இடமிருந்து / மேலிருந்து உள்ள தரம் + வலமிருந்து / கீழிருந்து உள்ள தரம் ) – 1

2) ஒரு நபரின் ஏதேனும் ஒருபுறமிருந்து உள்ள தரம் = (மொத்த எண்ணிக்கை – மறுபுறமிருந்து உள்ள தரம் ) + 1

3) இரு நபர்களுக்கு இடைப்பட்ட நபர்களின் எண்ணிக்கை = மொத்த எண்ணிக்கை – (இடமிருந்து / மேலிருந்து உள்ள தரம் + வலமிருந்து / கீழிருந்து உள்ள தரம்)

(எ.கா .1)

ஒரு வரிசையில் ராணி இடமிருந்து 5வது இடத்திலும், வலமிருந்து 22வது இடத்திலும் உள்ளார். எனில் அவ்வரிசையில் உள்ள மொத்த நபர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

1) 26 2) 27 3) 17 4) 28

மொத்த நபர்களின் எண்ணிக்கை =
(இடமிருந்து உள்ள தரம் + வலமிருந்து உள்ள தரம் ) – 1
= ( 5 + 22 ) – 1
= 27 – 1
= 26

(எ.கா .2)

50 பேர் கொண்ட ஒரு வகுப்பில் ஆதித்யா மேலிருந்து கீழாக 2வது ரேங்க் எடுக்கின்றார். அவர் அதே வகுப்பில் கீழிருந்து மேலாக எந்த ரேங்க் எடுப்பார்?

1) 47 2) 48 3) 46 4) 49

**கீழிருந்து மேலாக ஆதித்யாவின் தரம் = ( மொத்த எண்ணிக்கை – மேலிருந்து கீழாக உள்ள தரம்) + 1**

= (50 – 2) + 1

= 49

**(எ.கா .3)**

40 பேர் கொண்ட ஒரு வரிசையில் சசிகலா இடமிருந்து வலமாக 21வது இடத்திலும், மணிமொழி வலமிருந்து இடமாக 14வது இடத்திலும் அமர்ந்துள்ளனர். எனில், அவ்விருவருக்கும் இடையே அமர்ந்திருக்கும் நபர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

**இருவருக்கும் இடைப்பட்ட நபர்களின் எண்ணிக்கை =**
**மொத்த எண்ணிக்கை – ( இடமிருந்து உள்ள தரம் + வலமிருந்து உள்ள தரம்)**

= 40 – (21 + 14)

= 40 – (35)

= 5

**எண் / எழுத்து அறிவைச் சோதித்தல் :**

குறிப்பிட்ட அமைப்பில் இவ்வகையில் வரிசையாக எண்கள் / எழுத்துக்கள் எழுதப்பட்டிருக்கும். அவற்றைச் சார்ந்து வினாக்கள் அமையும்.

**(எ.கா .1)**

7 8 9 7 6 5 7 9 7 6 5 4 9 7 5 என்ற எண்ணில் 9 – ஐத் தொடர்ந்தும் 6 ஐ முன்னதாகக் கொண்டுள்ள 7–களின் எண்ணிக்கை.

1) 2 2) 3 3) 5 4) 4

விடை :

7 8 [9 7 6] 5 7 [9 7 6] 5 4 9 7 5

(9 ஐத் தொடர்ந்தும் 6ஐ முன்னதாகக்கொண்டும்)

எனவே, 2 முறை வந்துள்ளது.

(எ.கா 2)

கீழே கொடுக்கப்பட்ட எண்ணில் 9 ஐ முன்னதாகக் கொண்டு வராமலும், 6 ஐ பின்னதாகக் கொண்டு வராமலும் உள்ள 3- களின் எண்ணிக்கை?

9 3 6 6 3 9 5 9 3 7 8 9 1 6 3 9 6 3 9

1) 1 2) 2 3) 3 4) 4

விடை :

9 [3] 6 6 3 9 5 9 [3] 7 8 9 1 6 3 9 6 3 9

**விளக்கம்**

இவ்வகைக் கணக்குகளைப் பொறுத்தவரையில் ஆங்கில வார்த்தைகளை பொருத்திப் பார்ப்பது எளிது. கொடுக்கப்பட்ட கணக்கிலிருந்து **639** என்ற எண் வராமல் உள்ள 3 களின் எண்ணிக்கையை கண்டறிய வேண்டும்.

**6 3 9**

**( 6க்குப் பின்னாலும், 9க்கு முன்னாலும் உள்ள 3)-இவற்றை தவிர்த்து**

**639 என வராமல் உள்ள 3 களின் எண்ணிக்கை [2]**

**(எ.கா.3)**

கீழே கொடுக்கப்பட்ட தொடரில் எத்தனை முறை இரு அடுத்தடுத்த எண்களின் வித்தியாசம் 2 என வருகிறது?

6 4 1 2 2 8 7 4 2 1 5 3 8 6 2 1 7 1 4 1 3 2 8 6

1) 4 2) 6 3) 5 4) 3

விடை :

[6 4] 1 2 2 8 7 [4 2] 1 [5 3] [8 6] 2 1 7 1 4 [1 3] 2 [8 6]

எனவே **6** என்பதே சரியான விடை

(எ.கா. 4)

ஆங்கில வரிசை எழுத்துக்களின் வலப்பக்கத்தின் முடிவிலிருந்து பதினாறாவது எழுத்தின் இடப்பக்கமாக எட்டாவது எழுத்தாக அமைவது

1) C 2) B 3) D 4) A

**விடை.**

A B [C] D E F G H I J (K) L M N O P Q R S T U V W X Y Z

26 25 [24] 23 22 21 20 19 18 17 (16) 15 14 13 12 11 10 9 8 7 6 5 4 3 2 1

8வது எழுத்து ← • ← முடிவிலிருந்து 16வது எழுத்து

எனவே C சரியான விடை.

| பயிற்சி வினாக்கள் | Exercise Questions |
|---|---|
| 1. ஒரு வகுப்பில் அரையாண்டுத் தேர்வில் வெற்றி பெற்றவர்களுள் விஜய் மேலிருந்து 14வது இடத்திலும் கீழிருந்து 30வது இடத்திலும் உள்ளார். அத்தேர்வில் 15 மாணவர்கள் தோல்வியுற்றனர் எனில் எத்தனை மாணவர்கள் தேர்வு எழுதினார்கள்?<br>1) 57 2) 58 3) 56 4) 55 | 1. In a Class, among the passed students in Half-Yearly Exam, Vijay ranks 14th from the top and 30th from the bottom. In that exam, 15 students got failed. How many students wrote the examination?<br>1) 57 2) 58 3) 56 4)55 |
| 2. தினேஷ் என்பவர் 40 பேர் கொண்ட ஒரு வரிசையில் வலது புறத்திலிருந்து 14வதாகவும், மோகன் என்பவர் இடதுபுறத்தில் இருந்து பதினெட்டாவது இடத்திலும் உள்ளனர். எனில், தினேஷ் மற்றும் மோகன் ஆகிய இருவருக்கிடையே அமர்ந்துள்ளவர்களின் எண்ணிக்கை?<br>1) 6 2) 8 3) 7 4) 9 | 2. Dinesh is fourteenth from the right end and Mohan is eighteenth from the left end in a row of 40 boys. How many boys are there in between Dinesh and Mohan?<br>1) 6 2) 8 3) 7 4) 9 |
| 3. ஒரு வகுப்பில் சுனில் என்பவர் மேலிருந்து 7வது நிலையிலும் கீழிருந்து 27வது நிலையிலும் உள்ளார். எனில், வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை ?<br>1) 31 2) 32 3) 33 4) 34 | 3) Sunil ranked 7th from the top and 27th from the bottom in a class. How many students are there in a class?<br>1) 31 2) 32 3) 33 4) 34 |
| 4. நான் ஒரு வரிசையில் இருபுறமும் இருந்து 11வது இடத்தில் உள்ளேன். எனில் , அவ்வரிசையில் உள்ள மொத்த நபர்களின் எண்ணிக்கை எத்தனை?<br>1) 11 2) 20 3) 21 4) 22 | 4) If I am eleventh in a queue starting either end, how many persons are there in the queue?<br>1) 11 2) 20 3) 21 4) 22 |
| 5. ஒரு நேர்வரிசையாக அமர்ந்துள்ள மாணவர்களில் கவிதா இரு முனைகளிலிருந்தும் 21-வதாக அமர்ந்திருந்தால் அவ்வரிசையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை எத்தனை?<br>1) 42 2) 40 3) 43 4) 41 | 5. In a row of students, Kavitha is 21st from either end of the row. The number of students in the row is<br>1) 42 2) 40 3) 43 4) 41 |

6. 40 பேர் கொண்ட வகுப்பில் ரவி என்பவர் சுந்தரைவிட 7 இடங்கள் ( Rank ) முன்னதாக உள்ளார். கடைசியிலிருந்து 17வது இடத்தில் சுந்தர் இருந்தால், முதலிலிருந்து ரவி எத்தனையாவது இடத்தில் இருப்பார்?

1) 16 2) 17 3) 18 4) 24

7. ஒரே வரிசையில் நின்றிருக்கும் 20 சிறுமிகளில், தீபா இடது ஓரத்திலிருந்து ஐந்தாவதாகவும், பூஜா வலது ஓரத்திலிருந்து பத்தாவது இடத்திலும் நிற்கின்றனர். பூஜா தீபாவை நோக்கி ஐந்து இடங்கள் நகர்கிறார் எனில், பூஜா, இடது ஓரத்திலிருந்து எந்த இடத்தில் நிற்கின்றார்?

1) ஏழாவது 2) ஐந்தாவது
3) நான்காவது 4) ஆறாவது

8. மாணவர்கள் வரிசையில் நிற்கின்றனர். அதில் சத்யா என்ற மாணவர் இடது ஓரத்திலிருந்து ஆறாவதாகவும், ராகவ் என்ற மாணவர் வலது ஓரத்திலிருந்து எட்டாவதாகவும் நிற்கின்றனர். சத்யாவிற்கும், ராகவிற்கும் இடையில் எவரும் நிற்கவில்லை எனில், வரிசையில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை.

1) 12 2)14 3) 13 4) 16

9. 52 மாணவர்கள் உள்ள ஒரு வகுப்பில் லீலா என்ற மாணவி மேலிருந்து எட்டாவது தரவரிசையில் உள்ளார். அடுத்த முனையிலிருந்து அவரது தரவரிசை.

1) 44 2) 43 3) 45 4) 46

10. ராஜா, மாணவர்கள் உள்ள வரிசையில் நடுவில் நிற்கின்றான். அவன் முன்பகுதியிலிருந்து 7வதாக நிற்கின்றான். எனில், அவனுக்கு பின்னால் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை எத்தனை?

1) 6 2) 7 3) 8 4) 15

6. Ravi is 7 ranks ahead of Sundar in a class of 40. If Sundar's rank is 17 from the last, what is Ravi's rank from the first?

1) 16 2) 17 3) 18 4) 24

7. In a row of 20 girls, Deepa stands fifth from the left end and Pooja stands tenth from the right end. If Pooja moves five places towards Deepa, what will be her position from the left end?

1) $7^{th}$ 2) $5^{th}$
3) $4^{th}$ 4) $6^{th}$

8. Students line up in a queue in which Sathya stands sixth from left end and Raghav stands eight from right end. No one stands in between Sathya and Raghav. The number of students in the queue is

1) 12 2) 14
3) 13 4) 16

9. Leela is at $8^{th}$ rank from the top in a class of 52 students. Her rank from the bottom is

1) 44 2) 43
3) 45 4) 46

10. Raja is standing in the middle of a row of boys. He is standing $7^{th}$ from the front end. How many boys are behind him?

1) 6 2) 7
3) 8 4) 15

11. ஒரு வரிசையில் குமார் முன்னால் இருந்து 10வதாகவும், வீரா பின்னால் இருந்து 25-வதாகவும், நகுல் என்பவர் இருவருக்கும் நடுவில் நிற்கின்றார். அவ்வரிசையில் 50 பேர் உள்ளனர். எனில், முன்னால் இருந்து நகுலின் நிலை யாது?

1) 20-வது 2) 19-வது
3) 18-வது 4) 17-வது

12. 7 8 9 7 6 5 3 4 2 8 9 7 2 4 5 9 2 9 7 6 4 7 என்ற எண் தொடரில் 9 என்ற இலக்கத்தினை தொடர்ந்து, 6 என்ற இலக்கத்தினை முன்னதாக கொண்ட 7-களின் எண்ணிக்கை

1) 2 2) 5 3) 4 4)3

13. கீழே கொடுக்கப்பட்ட தொடரில், எத்தனை முறை இரு அடுத்தடுத்த எண்களின் வித்தியாசம் 3 என வருகிறது?
8 5 1 7 6 3 4 8 5 9 7 4 1 9 6

1) 3 2) 4 3) 5 4) 6

14. கீழ்கண்ட எண் தொடரில், எத்தனை முறை 5 என்ற எண்ணை முன்னதாகக் கொண்ட 2-கள் வருகின்றது?
4 3 5 2 7 8 0 5 2 9 7 5 2 1 4

1) 3 2) 5 3) 6 4) 4

15. 7, 10, 2, 0, 3, 7, 5, 8, 9, 11, 12, 6 என்ற தொடரினை வலமிருந்து இடமாக மாற்றி அமைத்து, இடப்பக்கமாக 7-வது எண்ணிற்கு வலப்பக்கம் 4-வதாக அமையும் எண்?

1) 10 2) 2 3) 7 4) 5

16. ‘ REGIONAL’ என்ற வார்த்தையை ஆங்கில அகர வரிசைப்படி வரிசைப்படுத்தினால், எத்தனை எழுத்துக்கள்

